# சின்னஞ் சிறு விளம்பரம்


**ரைப்ரைட்டர் விற்பனைக்கு**

தமிழ். (புதிய, பழைய விசைப்பலகை) ஆங்கிலம், Standards - Portables தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை. யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக, ஷப்ரா அருகாமையில்). [இ/0023]

**மணமகன் தேவை**

கனடாவில் வசிக்கும் 30 வயதுடைய A/L இந்து வேளாள செவ்வாய் தோசமுள்ள இந்து பெண்ணுக்கு மணமகன் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். இல: 316. மே/பா உதயன், யாழ்ப்பாணம் [16930]

**புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை (ஆண்டு 5)**

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (மூன்றாவது) 2-6-1991 ஞாயிறு மு.ப 8-00, மு.ப 10-30. 219, நாவலர் வீதி. யாழ்ப்பாணம் பி.ப 4-00 (மக்கள் வைத்தியசாலை முன்பாக) குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதியில், நடைபெறும். பதிவு செய்யவும் புலமைப் பரிசில் Paper Class ஆரம்பமாகியுள்ளது. ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. [16927]

**சன்லைற் றைக்கிளினர்ஸ்**

தரமான, தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள். சன்லைற் றைக்கிளினர்ஸ், பெரியகடை, யாழ்ப்பாணம். [இ-0920]

**நோவு வைத்தியம்**

ஒட்டப்புல சமத்தர் நோவு எண்ணெய் எஸ்.ரீ. மெடிக்கல்ஸ், 490. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். [4051]

**A/L தனிப்பட்ட பிரத்தியேக வகுப்புகள்**

A/L பௌதிகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் பல ஆண்டுகளாக மேற்படி பாடங்களை கற்பித்து வரும் இலங்கை விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளோடு தனிப்பட்ட முறையில் விசேஷமாகக் கற்பிக்கப்படும். R பாலா B Sc (Cey) 17/1. பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [16926

**வைத்தியம்**

செங்கண்மாரி குந்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலைவலி, தலைவலியல், சூதகக்கட்டு, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி இராசரத்தினம், 121, 2ஆம் குறுக்கு தெரு. யாழ்ப்பாணம். [409]9


## மட்டக்களப்பு ஆஸ்பத்திரி அபிவிருத்தி

மட்டக்களப்பு ஆஸ்பத்திரி போதனா வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார். [இ-ஏ]


# மனையியல் சேவைக் காலப் பயிற்சி வகுப்பு

மருதனார்மடம் கோட்டக் கல்விப்பிரிவில் அடங்கிய மனையியல் ஆசிரியைகளுக்கான பயிற்சி வகுப்பு 31-05-91 புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியிலும், 4-06-91 இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும். நேரம் காலை 8-30 — 3-30 வரை.

மருதனார்மடம், கோட்டம். (16935)


## தீவுப்பகுதி மக்களுக்கு இன்ரறக்ட் உதவி

யாழ்ப்பாணம், மே 29

யாழ். திருக்குடும்பக் கன்னியர் பாடசாலையைச் சேர்ந்த இன்ரறக்ட் கழக மாணவிகள். பொது மக்களிடமிருந்து சேகரித்த நிதியிலிருந்து இடம்பெயர்ந்த தீவுப் பகுதி பாடசாலைச் சிறுவர்களுக்கு 177 மீற்றர் வெள்ளைச் சீருடைப் புடவைகளையும் வேறு உடுபுடவைகளையும் கொத்தணி அதிபர் மூலம் வழங்கினர்.

மேலும் இப்பாடசாலையைச் சேர்ந்த வர்த்தக மாணவ ஒன்றிய மாணவிகள் நூற்றுக்கும் அதிகமான சமைத்த உணவுப்பார்சல்களையும், மற்றும் உலர் உணவு வகைகளையும் சேகரித்து யாழ். அடைக்கலமாதா ஆலயத்தில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கினர். (இ)

## துறைமுக ஊழியர் 34 பேருக்கே நிவாரணம்

யாழ்ப்பாணம், மே 29

லங்கா சிமெந்து நிறுவன துறைமுக ஊழியர்கள் 34 பேருக்கு மட்டுமே நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வலி - வடக்கு உதவி அரசாங்க அதிபர் அறிவித்திருக்கிறார்.

இதற்காக இவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட "உ" கார்ட் யாழ். அரசாங்க அதிபரின் அனுமதியுடன் "இ" கார்ட்டாக மாற்றப்பட்டுள்ளது. ஏனைய ஊழியர்களுக்கு இவ்வித மாற்றம் எதுவும் செய்ய முடிவு செய்யப்படவில்லை எனவும் உ. அ. அதிபர் மேலும் தெரிவித்தார். (இ)


# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**A/L 91 Day Classes**

சகல பாடங்களும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன

2 ஆம் பிரிவு ஆரம்பம்: 03 - 06 - 1991

Spoken English with Grammer

புதிய பிரிவு ஆரம்பம்: 01 - 06 - 1991

காலை 8 மணி

(இ-6025)


# 6ஆம் வருட நினைவஞ்சலி



மலர்வு: 13 — 09 — 1968

உதிர்வு: 29 — 05 — 1985

செல்வன்

## இராஜேந்திரா சிவஜீவன் (பபா)

எம் இதய அரங்கத்தில்
இன்னிசை மேடை கட்டிக்
கூவிய சிறு குயிலே ......... பபா
விடியலுக்காய் பூபாளமிசைத்த - உன்
குஞ்சுக் குரல் வளையை
பிஞ்சென்றும் பாராது
நெஞ்சில் இரக்கமின்றி
வஞ்சகமாய் கொன்று
ஆண்டுகள் ஆறு ஆனாலும்
ஆறாது ஆறாது எங்கள் கண்ணீர்

என்றும் உன்பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அண்ணா, தங்கை,
உற்றார், உறவினர்கள்,
தோழர்கள்.

இல. 45/4, ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (16920)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13 | 02 | 1935

மறைவு: 29 | 05 | 1987

## அமரர் கா. ஆழ்வாப்பிள்ளை

(சந்திரால் உரிமையாளர், யாழ்ப்பாணம்)

ஆண்டுகள் நான்கு சென்றனவா
எம் இதயத்தில் உம் நினைவு அகலவில்லை
உம்மை நினைந்து உள்ளம் வாடுகின்றதே!
இவருடன் இறந்த எமது ஊரின்
மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

"சந்திரபவனம்"
கல்வாய் தெரு. அல்வாய். — குடும்பத்தினர். (4110)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 06 - 08 - 1954

மறைவு: 29 - 04 - 1991

திதி: 29 - 05 - 1991

அமரர்

## ஐயாத்துரை இராஜநாயகம்

அன்பின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து எம்மை வழிநடத்தி, மீளாத்துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்த அன்புத் தெய்வமே!

தங்களது ஆத்மா சாந்தியடைய வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

29 - 05 - 1991 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் உற்றார், உறவினர்கள், நண்பர்களைக் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

குடும்பத்தலைவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்,

இல 654/3 காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (16919)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



மண்ணில்: 21 - 06 - 1908

விண்ணில்: 29 - 04 - 1991

திருமதி

## கண்ணம்மா பொன்னையா

அன்னாரின் சபிண்டீகரண கிரியைகள் இன்று புதன்கிழமை (29-05-1991) காலை 10 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இக்கிரியைகளில் பங்கு பற்றி அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

சகோதரி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். (16984)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தோல்வியின் பின்னும் தயக்கம் ஏன்?

அரசாங்க ஊழியருக்கு இன விகிதாசாரப்படி பதவி உயர்வு வழங்கும் நடைமுறையை ரத்துச் செய்வதற்கு, அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் புதிதாகக் கொண்டுவரப்பட்டிருந்த இந்தப் புதிய திட்டம் தமிழ் அரச ஊழியருக்குச் சலுகை வழங்கும் ஒன்றாக அரசாங்கத்தினரால் காட்டப்பட்டது. ஆனால் இனவிகிதாசாரக் கோட்பாடுதான், எல்லா மக்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கும் அரசமைப்புச் சட்டத்திற்கு (அதன் 12ஆவது சரத்துக்கு) முரணானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது!

கல்வித் திணைக்களத்தில் பணிபுரியும் தமிழர் ஒருவர் தாக்கல் செய்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்றம், புதிய முறையானது இன அடிப்படையில் தேவையில்லாத ஒரு பாரபட்சத்தைப் புகுத்தும் அரசமைப்புக்குப் பாதகமான நடவடிக்கை என்று சாடியுள்ளது.

தமிழர்களுக்குச் சலுகை வழங்குவதற்கெனக் கொண்டுவரப்பட்ட திட்டம், அவர்களுக்குப் பாரபட்சம் காட்டும் நடைமுறையே என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

அயலில் உள்ள இந்தியாவில் வேலைவாய்ப்பு, பதவி உயர்வுகளுக்கு சாதி அடிப்படையிலான கோட்டா முறை நீண்ட காலமாக அமுலில் இருந்து வருகிறது. கண்ட பாவனையில் கொண்டை முடியும் தோரணையில், இலங்கையும் அதனைக் கடைப்பிடிக்க முயன்றது. அரசு நினைத்தது பிழைத்து விட்டது. நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

சென்ற ஆண்டில் புகுத்திய பிரஸ்தாப இனவிகிதாசாரத் திட்டத்தை விடாப்பிடியாக நடைமுறைப்படுத்துவதானால் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தியாக வேண்டும். அவ்வாறு செய்வதற்கு அரசுக்கு இப்போது போதிய நாடாளுமன்றப் பலம் இல்லை. அதனால் ஆப்பிழுத்த குரங்கு மாதிரி அரசு அகப்பட்டுக் கிடக்கிறது!

ஒற்றையாட்சி அமைப்பே இந்நாட்டில் தொடர வேண்டும். அதன் கீழ் தமிழர்களுக்குச் சிறு உரிமைகளையும், சில சலுகைகளையும் வழங்கி அவர்களின் பிரச்சினையைத் தீர்த்துவிட வேண்டும் என்று கொழும்பு அரசுகள் நீண்ட காலமாகக் கருதி வருகின்றன.

இரண்டு தேசிய இனங்கள் வாழும் நாட்டில் அது ஒவ்வாதது என்பதை ஆட்சிக் கட்டிலில் இருப்பவர்கள் உணர்வதாக இல்லை. இரு இனங்களும் சமத்துவமாகவும், சம உரிமைகளுடனும் வாழ்வதற்கு ஆகக் குறைந்தது சமஷ்டி அரசியல் அமைப்பு முறையாவது அதிகாரவலயம் தமிழர்களின் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுதல் அவசியம்.

இந்த இரண்டு அடிப்படை மாற்றங்களையும் செய்வதற்கு மனமொண்ணாமல் இருக்கும் வரை, கொழும்பு அரசுகளால் தமிழரின் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவே முடியாது!

இனவிகிதாசார வேலைவாய்ப்பு, பதவி உயர்வு போன்ற ஒற்றையாட்சிச் சலுகைகள் சரிவராது என்பதை அனுபவத்தில் கண்ட பின்னரும், அந்த முயற்சியில் தோல்வி கண்ட பின்னரும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, புதிய வடிவத் தீர்வு ஒன்றைத் தானே முன்வைப்பதற்கு அரசு பின்நிற்பதேன்? தயங்குவது ஏன்?

# ஈழ அகதிகள் உடனடியாக வெளியேற்றம் இல்லை

## சுப்பிரமணியம் சுவாமி தகவல்

புதுடில்லி, மே 29

இலங்கைத் தமிழ் அகதிகள் உடனடியாக தமிழகத்தில் இருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள்;

இத் தகவலை மத்திய சட்டம் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி புதுடில்லியில் செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

ராஜீவ் கொலையுண்டதை தொடர்ந்து இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் உடனடியாக தமிழ்நாட்டில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவும் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும் மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பது தெரிந்ததே.

இது பற்றி செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கே அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி முன்கண்டவாறு பதிலளித்தார். [இ-எ]

# எதியோப்பியத் தலைநகர் கிளர்ச்சிப் படையிடம் வீழ்ச்சி

## லண்டன் சமாதானப் பேச்சு முறிவடையும் நிலையில்

அடிஸ் அபாபா, மே 29

எதியோப்பியாவின் தலைநகரம் அடிஸ் அபாபா நேற்று கிளர்ச்சிப் படைகளிடம் வீழ்ச்சி அடைந்தது.

எதியோப்பிய மக்கள் புரட்சி ஜனநாயக முன்னணி என்று அழைக்கப்படும் புரட்சிப்படைகள் நேற்று தலைநகர் அடிஸ் அபாபாவுக்குள் பிரவேசித்தபோது தலைநகரில் அரச படைகளுக்கும், கிளர்ச்சிப்படைகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. அடிஸ் அபாபாவில் ஜனாதிபதி மாளிகையைச் சூழவுள்ள பகுதிகளில் பெரும் தீச்சுவாலை காணப்படுவதாகவும் புகைமண்டலம் அப்பகுதியை மூடி இருப்பதாகவும் பி.பி.சி. செய்தியாளர் தெரிவித்தார்.

அடிஸ் அபாபா வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான எதியோப்பிய அரச துருப்புகள் கிழக்கு சூடானுக்குள் தப்பி ஓடுகின்றனர் என்றும் எதியோப்பிய அகதிகள் பெரும் அளவில் அண்டை நாடுகளுக்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அடிஸ் அபாபாவில் உள்ள பிரிட்டிஷ் பிரசைகள் பாதுகாப்புக் கருதி பிரிட்டிஷ் தூதரகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இதற்கிடையில் லண்டனில் நடந்த திங்கட்கிழமை ஆரம்பமான எதியோப்பிய சமாதானப் பேச்சுகளில் இருந்து விலகிக் கொள்ளப் போவதாக எதியோப்பிய அரசதரப்பினர் விடுத்த பயமுறுத்தலை அமெரிக்கா நிராகரித்து விட்டது. [இ]

## மேல் மாகாண பாடசாலைகளுக்கு

# தமிழ்மொழி மூல ஆசிரியர்

மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் தமிழ் மொழி மூலம் விஞ்ஞானம், கணிதம், கலை மற்றும் வர்த்தகம் ஆகிய பாடங்களை போதிக்க பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களிடமிருந்து மேற்கு மாகாண சபையின், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி 21-06-1991 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

# ஒரே இரவில் 4 கடைகளில் திருடர்கள் கைவரிசை

மானிப்பாய், மே 29

மருதனார் மடம் சந்தியில் உள்ள நான்கு கடைகள் ஒரே இரவில் உடைக்கப்பட்டு திருட்டுக்கள் இடம் பெற்றுள்ளன.

உணவகம், மருந்துச்சாலை, அச்சகம், பலசரக்குக் கடை ஆகியவையே திருடர்களின் கைவரிசைக்கு உள்ளாகி இருக்கின்றன.

பெரும்பாலும் அரிசி, சீனி, சவர்க்காரம், பாக்மா பைக்கெட்டுகள் ஆகியவற்றையே திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

அதேசமயம் மருதனார் மடம் சந்தியில் உள்ள வைரவர் ஆலயத்தின் கதவு உடைக்கப்பட்டு களவு இடம் பெற்றுள்ளது.

தேங்காய், தேங்காய் எண்ணெய், கற்பூரம், ஊதுவத்தி, வெள்ளியினால் செய்யப்பட்ட வைரவர் அங்கி ஏனைய பூசைக்குரிய தளபாடங்கள் திருடப்பட்டுள்ளன.

உடுவிலில் அமைந்துள்ள சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான ஏழாம் இலக்க கிளைக் கடையும் சில நாட்களுக்கு முன் உடைக்கப்பட்டு இதே போன்று திருட்டு நடைபெற்றுள்ளது. [இ-90]

## சின்னம் சூட்டும் வைபவம்

யாழ்ப்பாணம், மே 29

சுடர்சாரணர் குழுவின் புதிய அங்கத்தவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பயிற்சிக் குழுத் தலைவர் திரு. சேர். நல்லையாவும் சிறப்பு விருந்தினராக, மில்க்வைற் அதிபர் கலாநிதி க. கனகராஜாவும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

பாடசாலை அதிபர் திரு. அ. ஸ்ரனிஸ்லாஸ், யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் ஆர். மைக்கல், ஆகியோரும் உரையாற்றினர். [இ]

## வலி - வடக்கு உ. அ. அதிபர்

காங்கேசன்துறை, மே 29

வலி - வடக்கு உதவி அரசாங்க அதிபராக, திரு. எஸ். சந்திரராசா நியமிக்கப்பட்டுள்ளார். [இ-68]

## சமூகவியல் அத்திவார பாடநெறி

யாழ்ப்பாணம், மே 29

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் சமூகவியல் அத்திவாரப் பாடநெறிக்கான பதிவுகள் எதிர்வரும் 31ஆம் திகதி மேற்கொள்ளப்பட உள்ளன. [இ-8]

# புகையிலை உற்பத்தியாளர் விற்க முடியாது திண்டாட்டம்

உரும்பராய், மே 29

புகையிலைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட பல விவசாயிகள் அவற்றை விற்க முடியாது திண்டாடுகின்றனர்.

பலரின் தோட்டங்களில் புகையிலைச் செடிகள், வாங்குவதற்கு எவரும் முன்வராததினால் தேங்கி இருக்கின்றன.

கொழும்புக்கு அனுப்புவதில் உள்ள கஷ்டத்தினால் புகையிலையை வாங்குவதற்கு பலரும் தயங்குகின்றனராம். [இ-154]

# இ. படை தாக்கிய வீடுகளின் சேத விவரம் சேகரிப்பு

இந்திய அமைதிப்படை தங்கியிருந்தபோது, பாவித்த வீடுகளில் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய விவரங்களை அனுப்பிவைக்குமாறு சகல உள்ளூராட்சி மன்றங்களையும் யாழ். பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா கேட்டுள்ளார். [இ-171]

# மின் தையல் இயந்திரம் கொண்டுவர அனுமதியில்லை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையால் கொள்வனவு செய்யப்பட்ட சப்பாத்துத் தைக்கும் மின்தையல் இயந்திரத்தைக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்க மறுத்துவிட்டது.

வைத்தியசாலைச் செலவில் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட இத் தையல் இயந்திரம் கடந்த ஒருவருட காலமாகக் கொழும்பிலேயே வைக்கப்பட்டிருக்கிறது.

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள முறிவு நெறிவு தொழிற்சாலையிலுள்ள தையல் இயந்திரம் பாவிக்க முடியாத நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. [இ-15]

## அர்ச்சயா ஆண்டு விழா

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரால் நடத்தப்படும் அர்ச்சயா பழந்தொழிற்சாலையின் முதலாவது ஆண்டு விழா கடந்த 20 ஆம் திகதி மேற்படி தொழிற்சாலையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன், பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி துரைராசா ஆகியோரின் வாழ்த்துச் செய்திகளுடன் மேற்படி ஆண்டு விழாவை முன்னிட்டு மலர் ஒன்றும் வெளியிட்டது. [இ-90]

## ராஜீவ் அஸ்தி சென்னைக்கு!

சென்னை, மே 29

மறைந்த ராஜீவ் காந்தியின் அஸ்தி திங்கள் இரவு சென்னைக்கு விமான மூலம் கொண்டு வரப்பட்டது.

அஸ்தி நிரம்பிய கலசம் ஒன்று புதுச்சேரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

வியாழன் காலை அஸ்தி கன்னியா குமரியில் கரைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தனி ரயிலில் சென்னையில் இருந்து அஸ்தி கன்னியா குமரிக்கு எடுத்துச் செல்லப்படும். [இ-எ]

## கஞ்சாங்கா மலை உச்சியை அடைந்தனர்

புதுடில்லி, மே 29

உலகிலேயே மூன்றாவது உயரமான கஞ்சாங்கா மலைச் சிகரத்தை ஜப்பானிய — இந்திய மலை ஏறும் குழு ஒன்று இம்மாதம் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் எட்டியதாக அறிவிக்கப்பட்டது.

8 ஆயிரம் மீற்றர் உயரமானது இம்மலைச் சிகரம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## உள்துறை செயலாளராக விஜயராகவன்

சென்னை, மே 29

தமிழ் நாடு மாநில உள்துறைச் செயலாளராக திரு. பி. விஜயராகவன் நியமிக்கப்பட்டார்.

ராஜீவ் கொலையுண்ட போது செயலாளராக இருந்த திரு. கே. ஜே. எம். ஷெட்டிக்கு பதிலாக புதிய நியமனம் செய்யப்பட்டது. [இ-எ]

# சேதமுற்ற வழிபாட்டுத் தலங்களை திருத்த போதிய நிதி ஒதுக்கீடு இல்லை

## யாழ். மாவட்டத்துக்கு சுமார் 8 லட்சம் மட்டுமே

யாழ்ப்பாணம், மே 29

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சேதமடைந்த வழிபாட்டுத் தலங்களைத் திருத்துவதற்கு போதிய நிதி ஒதுக்கப்படாததால் முன்னுரிமை அடிப்படையில் சில வழிபாட்டுத் தலங்கள் மட்டுமே திருத்தப்பட உள்ளன.

சேதமடைந்த வழிபாட்டுத் தலங்களைத் திருத்துவதற்கு நிதி உதவி கோரி வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சுக்கு ஏராளமான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

ஆனால் யாழ். மாவட்டத்துக்கு 8 லட்சத்து 13 ஆயிரம் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 83 ஆயிரத்து 860 ரூபாவும், அம்பாறை மாவட்டத்துக்கு 4 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 3 லட்சத்து 55 ஆயிரத்து 900 ரூபாவும், திருகோணமலை மாவட்டத்துக்கு 2 லட்சத்து 76 ஆயிரத்து 400 ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கு 1 லட்சத்து 3 ஆயிரத்து 50 ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 83 ஆயிரத்து 860 ரூபாவும், மன்னார் மாவட்டத்துக்கு 1 லட்சத்து 14 ஆயிரத்து 930 ரூபாவும் [illegible]

இது சம்பந்தமாக வடக்கு-கிழக்கு மாகாணசபையின் கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சு வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் சேதம் அடைந்த வழிபாட்டுத் தலங்கள் பற்றி தமக்கு ஏராளமான விண்ணப்பங்கள் கிடைத்து வருகின்றன என்றும் இவை அனைத்துக்கும் உதவி வழங்குவதற்கு நிதி பற்றாக்குறையாக இருப்பதால் சேதமடைந்த வழிபாட்டுத் தலங்களில் முன்னுரிமை வழங்கி ஒரு சில வழிபாட்டுத் தலங்களைத் தெரிவு செய்து [illegible] அனுப்பி [illegible] கேட்கப்பட்டுள்ளது. [இ-100]

# மிருக வளர்ப்புடன் இணைந்த விவசாயம்

கால்நடை வளர்ப்புடன் ஒன்றிணைந்த பயிர்ச் செய்கை தந்திரம் சூழ்நிலையில் முக்கியமானதாக அமைகின்றது.

எருது வளர்ப்பின் மூலம் விவசாயிகள் விவசாய நிலங்களை உழ முடிகிறது. அத்துடன் பொருள்களை வெவ்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லும் இழுவையாகவும், நீர் இறைப்பதற்காகவும் எருதுகளை உபயோகித்துக் கொள்ள முடிகின்றது.

விவசாய நிலப்பரப்பில் இருந்து வருகின்ற களைகள் மற்றும் விவசாய விளை உபபொருள்களை எருதுகளுக்கு உணவாக வழங்கமுடியும். எருதுகளில் இருந்து வரும் சாணம், சலம் போன்றவற்றை வடிவமைக்கப்பட்ட உபகரணத்துள் சேர்த்து உயிரியல் வாயுவை எடுக்க முடியும். இதை விவசாயம் மற்றும் பண்ணைப் பராமரிப்புக்கு எரிபொருளாக உபயோகிக்க முடியும்.

உயிரியல் வாயு உபகரணத்தில் இருந்து வரும் சாணச்சலக்கூழை பசளையாக விவசாய நிலப்பரப்பிற்கு உபயோகிக்க முடியும். இவ் எருவில் களைகளுக்கு உரிய வித்துக்கள் அழிவடைந்து (முளைதிறன் இறந்த நிலையில்) காணப்படும். இதனால் விவசாயச் செய்கையில் களை முளைக்கும் அளவையும் குறைக்க முடியும்.

இச்செய்முறை ஒரு சுழற்சி வடிவில் காணப்படுவதால் எதுவித பாதிப்பும் இன்றிப் பலனைப் பெற முடிகின்றது.

— தமிழீழ ஆய்வு நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

